**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-32** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர் திரு.மணிவாசகம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 03rd day of April 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் தற்போது கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.12.2020 அன்று கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

இதே துறையில் மூத்தஉதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது, வேலாயுதம்பாளையம் கா.நி.கு.எண். 778/2020 வழக்கில் தொடர்புடைய ரஞ்சித்குமார், வயது 27, ஆண் பிரேதத்தின்மீது பிரேத பரிசோதனை செய்வதற்காக வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளரிடமிருந்து அன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு பெற்ற வேண்டுகோள் கடிதத்தின்படி, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்ட, பிரேத பரிசோதனையை அன்று பிற்பகல் 1.15 மணிக்கு தொடங்கினேன்.

<u>பிரேதத்தில் காணப்பட்டவை :-</u>

<u>உடைகள் :-</u>

பிரேதத்தில் மஞ்சள் நிற சட்டை, கருப்பு நிற டிராயர், வெள்ளைபனியன் ஆகியவை இரத்தம் தோய்ந்து காணப்பட்டன.

பிரேதத்தில் மரண விரைப்பு ஆரம்பகட்ட நிலையில் இருந்தது. மரணத்திற்கு பின்பான இரத்தஉறைவு உடலின் பின்பகுதியில் லேசாக காணப்பட்டது. பிரேதமானது சுமாரான உடல்வாகுடன் காணப்பட்டது. அழுகலுக்கான மாற்றம் எதுவும் இல்லை.

<u>மரணத்திற்கு முன்பான கீழ்கண்ட காயங்கள் பிரேதத்தில் காணப்பட்டன:-</u>

1. 9 x 1 x 0.5cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் தலையின் இடதுபக்கம் காணப்பட்டது. அந்த காயமானது இடது காதிலிருந்து 9 செ.மீ. மேல்புறமாக இருந்தது.

2. 11 x 1 x 0.5 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் தலையின் இடதுபக்கம் காணப்பட்டது. அந்த காயமானது மேற்கண்ட 1 வது காயத்திலிருந்து 1.5 செ.மீ. பின்புறமாக இருந்தது.

3. 9 x 1 x மண்டையோடு ஆழத்தில் சாய்வான வெட்டுக்காயம் தலையின் உச்சிப்பகுதியில் காணப்பட்டது. அந்த காயமானது தலைத்தோல், மண்டையோடு ஆகியவற்றை வெட்டியிருந்தது.

4. 12 x 1 x 0.5cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் உச்சந்தலையில் காயம் எண். 3 ல் குறுக்காக காணப்பட்டது.

5. 11 x 1 x 2.5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் முகத்தின் வலதுபக்கமாக காணப்பட்டது. அந்த காயமானது வலது காது, கன்னம், திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு, மூக்கு ஆகியவற்றை வெட்டியிருந்தது.

6. 7 x 1 x 0.5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் மூக்கில் காணப்பட்டது.

7. 10 x 1 x 2 cm அளவில் நேரான வெட்டுக்காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு ஆகியவற்றை வெட்டியிருந்தது. மேற்சொன்ன காயம், காயம் எண். 6 லிருந்து 1 செ.மீ. கீழாக காணப்பட்டது.

8. 7 x 1 x 1.5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு ஆகியவற்றை வெட்டியிருந்தது. மேற்சொன்ன காயம், காயம் எண். 7 லிருந்து 1 செ.மீ. கீழாக காணப்பட்டது.

9. 6 x 1 x 3 cm அளவில் நேரான வெட்டுக்காயம், வலது கன்னத்தில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு ஆகியவற்றை வெட்டியிருந்தது. மேற்சொன்ன காயம், காயம் எண். 8 லிருந்து 1 செ.மீ. கீழாக காணப்பட்டது.

10. 12 x 1 x 5 cm அளவில் நேரான வெட்டுக்காயம் நாடிப்பகுதியில் காணப்பட்டது. அந்த காயமானது திசுக்கள், இரத்தக்குழாய், நரம்பு, தாடைஎலும்பு, கழுத்து தசைகள், உணவுக்குழாய், மூச்சுக்குழாய் ஆகியவற்றை வெட்டியிருந்தது.

11. 7 x 1 x 2 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் வலது முன்னங்கையில் காணப்பட்டது.  அந்த காயமானது திசுக்கள், தசைகளை வெட்டியிருந்தது. முழங்கையிலிருந்து 4 செ.மீ. கீழாக காணப்பட்டது.

12. 7 x 1 x 3 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் வலது முன்னங்கையில் காணப்பட்டது.  டஅந்த காயமானது மேற்சொன்ன காயம் எண். 11 லிருந்து 2 செ.மீ. கீழாக காணப்பட்டது.  திசுக்கள், இரத்தக்குழாய், தசைகள் வெட்டப்பட்டிருந்தது.

13. 5 x 2 x 3 cm அளவில் நேரான வெட்டுக்காயம் வலதுகை மணிக்கட்டில் காணப்பட்டது.  அந்த காயமானது திசுக்கள், தசைகள், இரத்தக்குழாய், நரம்புகள் ஆகியவற்றை வெட்டியிருந்தது.

14. 3 x 1 x 1.5 cm  அளவில் சாய்வான வெட்டுக்காயம் வலது கையின் பின்புறமாக காணப்பட்டது.

15. 5 x 2 x 1.5 cm, 4 x 2 x 1.5 cm, 1 x 1 x 1 cm அளவில் சாய்வான மூன்று வெட்டுக்காயங்கள் இடது உள்ளங்கையில் காணப்பட்டது.

16. 5 x 1 x 0.5 cm அளவில் சாய்வான வெட்டுக்காயம் இடது கையில் பின்பகுதியில் காணப்பட்டது.

<u>சிராய்பு காயங்கள்</u> :-

1. 7 x 0.25 cm அளவில் வலது தோள்பட்டையில் காணப்பட்டது.
2. 3 x 0.5 cm அளவில் இரண்டு சிராய்ப்பு காயங்கள் வலது கையில் காணப்பட்டது.
3. 6 x 0.25 cm அளவில் வலதுபக்க நெஞ்சுப்பகுதியில் காணப்பட்டது.
4. 8 x 0.25 cm அளவில் நெஞ்சுப்பகுதியில் நடுவில் காணப்பட்டது.
5. 11 x 0.25 cm அளவில் தொப்புளுக்கு வலதுபுறமாக காணப்பட்டது.
6. 10 x 0.25 cm அளவில் தொப்புளுக்கு இடதுபுறமாக காணப்பட்டது.

7. 11 x 0.25 cm அளவில் இடது தோள்பட்டையில் காணப்பட்டது.

<u>பிற உறுப்புகள்</u> :-

தலைத்தோல், மண்டையோடு ஆகியவற்றில் மேற்சொன்ன வெட்டுக்காயம் எண்கள். 3, 4 காணப்பட்டன. மூளையில் இரண்டுபக்க பரைட்டல் பகுதியில் இரத்தக்கட்டு காணப்பட்டன. மார்புக்கூடு, வயிற்றுப்பகுதி சீராக இருந்தது. இருதயம் சீராக இருந்தது. இரத்தக்குழாய்கள் சீராக காணப்பட்டன. நுரையீரலில் இரத்தம் படிந்திருந்தது. கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல் ஆகியவை சீராக காணப்பட்டது. அவற்றின் குறுக்குவெட்டுத்தோற்றம் வெளிறியிருந்தது. இரைப்பையில் 300 கிராம் அளவிலான பாதி செறித்த உணவு காணப்பட்டது. வேறு வாடை இல்லை. சவ்வு சீராக இருந்தது. சிறுகுடலில் 50 கிராம் அளவிலான பாதி செறித்த உணவு காணப்பட்டது. வேறு வாடை இல்லை. சவ்வு சீராக இருந்தது. சிறுநீர்பையில் 30 மில்லி சிறுநீர் காணப்பட்டது. நாவடிஎலும்பு, முதுகுதண்டுவடம் ஆகியவை சீராக காணப்பட்டது.

மேற்கண்டவைகளில் இருந்து இறந்துபோன நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினாலும், அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கினாலும் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என கருத்துக்கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.24.

பிரேத பரிசோதனையின்போது உடல் உள்ளுறுப்புகள் மற்றும் இரத்தமாதிரி சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு மற்றும் குருதி வடிநீரியல் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் அதே கருத்துடன் இறுதியறிக்கை வழங்கினேன். அந்த இறுதியறிக்கை அ.சா.ஆ.25.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

என்னிடம் காட்டப்படும் சா.பொ.7 முதல் 9 மற்றும் நீதிமன்றத்திலுள்ள பெரிய கத்தி, வாள், வீச்சருவாள்கள் ஆகியவற்றால் நான் மேற்சொன்ன வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

1, 4, 5, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்ன வெட்டுக்காயங்கள் கூர்மையான ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. எந்த காயம், எந்த ஆயுதத்தால் ஏற்பட்டது என குறிப்பிட்டு கூற முடியாது.

3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வெட்டுக்காயங்கள் அனைத்தும் gapping cut injury என அ.சா.ஆ.24 ல் குறிப்பிட்டுள்ளேன். cut injury என்பது வெட்டுக்காயம். Gapping என்பது மரணத்திற்கு முன்பு ஏற்பட்ட காயங்களை குறிக்கும். நான் கூறுவது தவறு என்றும், gapping cut injury என்பது அதன் தன்மை வேறுபடும் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள பெரியஅருவாள்களை கொண்டு மட்டும்தான் நான் சொன்ன வெட்டுக்காயங்களை ஏற்படுத்த முடியும் என்றும், சா.பொ.7 முதல் 9, நீதிமன்றத்தில் உள்ள மற்ற ஆயுதங்களை வைத்து ஏற்படுத்த முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. சிறிய ஆயுதங்களால் ஏற்படுத்திய காயங்களையும் நான் குறிப்பிட்டுள்ளேன். வெட்டுக்காயம் எண். 14, 15, 16 ஆகியவை சிறிய அளவிலான கூரான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புள்ளது. காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது, எந்த காயம், எந்த ஆயுதத்தால் ஏற்படுத்த வாய்ப்புள்ளது என கூறினேனா என்றால் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது, ஆயுதங்களை காண்பித்து விசாரித்தார்கள். சா.பொ.7 முதல் 9 ஆயுதங்களால் குத்தி காயங்களை மட்டும் ஏற்படுத்த முடியும் என்றும், வெட்டுக்காயங்களை ஏற்படுத்த முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது,

ஆயுதங்களின் நீளம், அகலம் குறித்து விசாரித்தாரா என்றால் அதுகுறித்து ஞாபகமில்லை.

<u>6 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.</u>**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-33** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பூபதி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 03rd day of April 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூர் வட்டம், ஏமூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.12.2020 அன்று புகளூர் வட்டம், வேட்டமங்கலம் மேற்கு கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். ......

அப்போது என்னுடன் சாட்சி அருண்குமார் என் கிராம உதவியாளராக பணிபுரிந்தார். கடந்த 19.12.2020 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்து, நொய்யல் செல்லாண்டியம்மன் கோவில் அருகில் குற்றவாளியை பிடித்து வைத்திருப்பதாகவும், அங்கு வருமாறும் தெரிவித்தார். நான் என் உதவியாளரை அழைத்துக்கொண்டு காலை 7.30 மணிக்கு அங்கு சென்றேன். அங்கு வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் போலீசார் இருந்தனர். அங்கு ஐந்துபேரை போலீசார் பிடித்து வைத்திருந்தனர். அவர்கள் கலையரசன், பிரசாந்த், பிரசாத், சேக்தாவுத், கோகுல்நாத் ஆகியோர் ஆவர். பின்னர் கலையரசன் என்பவரை ஆய்வாளர் விசாரித்தபோது, கலையரசன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் சொல்ல சொல்ல காவலர் ஒருவர் மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார். பின்னர் காவல்நிலையத்திற்கு வந்து, பிரிண்ட் எடுத்து, அதில் கலையரசன் என்பவரிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் நானும், சாட்சி அருண்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலம் அளித்தவுடன், கலையரசன் வைத்திருந்த TN 47 AT 8502 என்ற பதிவு எண் கொண்ட TVS Sport Star என்ற இருசக்கர வாகனத்தையும், வெள்ளை கலர் பார்டர் போட்ட கருப்பு வேட்டி ஆகியவற்றை ஆஜர் செய்ததை, போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளர் அருண்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் அ.சா.ஆ.26. நீதிமன்ற அரங்கத்திற்கு வெளியே வராண்டாவில் உள்ள TVS Sport Star வாகனம் சா.பொ.13.

அதன்பின்னர், எதிரி பிரசாந்த் என்பவரை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர் ஒருவர் தட்டச்சு செய்தார். பின்னர் காவல்நிலையத்திற்கு சென்று பிரிண்ட் எடுத்து, எதிரி பிரசாந்திடம் கையெழுத்து வாங்கினர். அதில் நானும், என் உதவியாளர் அருண்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி பிரசாந்த் என்பவர் வைத்திருந்த புளூ கலர் ஜீன்ஸ் பேண்ட் மற்றும் பஜாஜ் பிளாட்டினம் இருசக்கர வாகனத்தை ஆஜர்

செய்ததை, ஆய்வாளர் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.27. புளூ கலர் ஜீன்ஸ்பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.14. பஜாஜ் பிளாட்டினம் இருசக்கர வாகனம் நீதிமன்ற வராண்டாவில் உள்ளது. அது சா.பொ.15. அதன் பதிவு எண். TN 47 AQ 8502.

பின்னர், எதிரி பிரசாத் என்பவரை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர் ஒருவர் மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார். ஒப்புதல் வாக்குமூலம் அளித்தவுடன் ஆய்வாளர் ஒரு ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தை மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் காவல்நிலையத்தில் வைத்து நானும், என் கிராம உதவியாளரும் சாட்சி கைொயப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.28. அந்த ஸ்பிளண்டர் இருசக்கர வாகனம் நீதிமன்ற வராண்டாவில் உள்ளது. அது சா.பொ.16.

பின்னர், எதிரி சேக்தாவுத் என்பவரை ஆய்வாளரை விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர் ஒருவர் மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார். அதை காவல்நிலையத்தில் வைத்து பிரிண்ட் எடுத்து, அதில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி சேக்தாவுத் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த இடத்தில் வைத்து, ஒரு சூரி கத்தியையும், ஒரு புளூ கலர் ஜீன்ஸ் பேண்டையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அதை ஆய்வாளர் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.29. அந்த சூரி கத்தி நீதிமன்றத்தில் உள்ளது. அது ஏற்கனவே சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் கைப்பற்றிய ஊதா நிற ஜீன்ஸ் பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.17.

பின்னர், எதிரி கோகுல்நாத்தை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தை காவலர் ஒரு மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார். பின்னர் காவல்நிலையத்திற்கு வந்து பிரிண்ட் எடுத்து, அதில் நானும், என் .....

உதவியாளர் அருண்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர், எதிரி கோகுல்நாத்திடமிருந்து ஜீன்ஸ் பேண்ட்டை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.30. அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் கைப்பற்றிய ஜீன்ஸ் பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.18.

பின்னர், எதிரி கலையரசன் எங்களை மூர்த்திபாளையம், ஆத்தூர் பிரிவு இறக்கத்திலுள்ள ஏழுகன்னிமார் கோயில் அருகில் உள்ள புதரில் மறைத்து வைத்திருந்த வாள்கத்தி மற்றும் வீச்சருவாளை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். எதிரி கலையரசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.31. எதிரி ஆஜர் செய்த வாள்கத்தி மற்றும் வீச்சருவாள்களை ஆய்வாளர் ஒரு மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.32. ஆய்வாளர் கைப்பற்றிய வாள்கத்தி நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.19. வீச்சருவாள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.20.

எதிரி கலையரசன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபோது, வெள்ளைபார்டர் போட்ட கருப்பு கலர் வேட்டியை ஆய்வாளரிடம் ஒப்படைத்ததை ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த வேட்டி சா.பொ.21.

இது சம்மந்தமாக போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தனர்.

<u>**3** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

செல்லாண்டியம்மன் கோவில் வேட்டமங்கலம் கிராமத்தில் உள்ளது. போலீசார் தகவல் சொன்னவுடன், என் உதவியாளரை போனில் வரச்சொல்லி, அவர் வருவதற்கு அரைமணி நேரமானது. செல்லாண்டியம்மன் கோவிலுக்கு நாங்கள் சென்று பார்த்தபோது, ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோருடன் சேர்த்து ஆறு போலீசார் இருந்தனர். பொதுமக்கள் எத்தனை பேர் வேடிக்கை .....

பார்த்தனர் என்றால் பொதுமக்கள் சிலர் பார்த்துக்கொண்டு சென்று வந்தனர். எத்தனை பேர் வந்து பார்த்தனர் என்று எனக்கு எண்ணிக்கை தெரியாது. நான் சென்றபோது, போலீசாருடன் ஐந்து எதிரிகளும், இருசக்கர வாகனங்களும் இருந்தன. எதிரி கலையரசன் என்பவர் வேட்டியை கையில் வைத்திருந்தார். அவர் அந்த உடையை அணிந்திருந்தாரா அல்லது கையில் வைத்திருந்தாரா என்றால் நான் பார்க்கும்போது அவர் கையில் வைத்திருந்தார். எதிரி பிரசாத் ஒப்படைத்த ஜீன்ஸ் பேண்டை அவர் நான் பார்க்கும்போது அவர் கையில் வைத்திருந்தார். எதிரி சேக்தாவுத் என்பவரிடமிருந்து கைப்பற்றிய ஜீன்ஸ் பேண்ட்டை அவர் கையில் வைத்திருந்தார். எதிரி கோகுல்நாத்திடமிருந்து கைப்பற்றிய ஜீன்ஸ் பேண்ட் மற்றும் கத்தியை அவர் கையில் வைத்திருந்தார். ஒப்புதல் வாக்குமூலங்கள், கைப்பற்றுதல் மகஜர்கள் ஆகியவற்றை செல்லாண்டியம்மன் கோவிலில் வைத்து போலீசார் தட்டச்சு செய்தனர். பின்னர் அவைகளை காவல்நிலையத்திற்கு வந்து, பிரிண்ட் எடுத்தவுடன் நான் கையெழுத்து போட்டேன். எதிரிகள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்தி ஆய்வாளர் விசாரித்தார். எத்தனை அடி தூரத்தில் தனிமைப்படுத்தி விசாரித்தார் என்றால் எத்தனை அடி என்று தெரியவில்லை. எதிரி கலையரசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்வதற்கு சுமார் ஒன்றரை மணி நேரம் ஆனது. மற்ற எதிரிகளையும் விசாரிப்பதற்கு தலா ஒன்றரை மணி நேரமானது. ஆய்வாளர் கைப்பற்றிய கத்தியை போலீசார் அளவு எடுத்தனர். அந்த இடத்திலேயே வைத்து அளவு எடுத்தனர். எதிரி கலையரசன் ஏழுகன்னிமார் கோவில் அருகில் உள்ள புதரிலிருந்து கைப்பற்றிய வீச்சருவாள், வாள்கத்தி ஆகியவற்றை அந்த இடத்திலேயே போலீசார் அளவு எடுத்தனர். கைப்பற்றுதல் மகஜர்களில் எதிரிகள் கையெழுத்திடவில்லை. நான் கையெழுத்திட்டு, என் அலுவலக முத்திரையை பதிவு செய்யவில்லை. அவசரத்தில் சென்றதால் நான் அலுவலக முத்திரையை எடுத்துச்செல்லவில்லை. பொதுவாக அலுவலக முத்திரையை வெளியில் எடுத்துச்செல்வோம். நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் எதிரிகளை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றும், எதிரிகள் எங்கள் முன்னிலையில் ......

ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலங்கள், கைப்பற்றுதல் மகஜர்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டன என்றால் சரியல்ல. ஆய்வாளர் கைப்பற்றிய இருசக்கர வாகனங்களின் பதிவு சான்றிதழ்களை கைப்பற்றினார்களா என்றால் வாகனத்தை மட்டும் கைப்பற்றினார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**1, 4, 5, 8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சாட்சி அருண்குமார் பக்கத்து கிராமத்தை சேர்ந்த கிராம உதவியாளர். அந்த காலக்கட்டத்தில் என் கிராமத்தில், கிராம உதவியாளர் பணியிடம் காலியாக இருந்தது. உதவிக்காக சாட்சி அருண்குமாரை அழைத்துச்சென்றேன். நான் சொன்னபடி, சொன்ன விதத்தில், ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டன என்றும் சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டு, தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை போனில் வழக்கிற்காக அழைத்தார் என்ற விவரத்தை, ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் இல்லை.

<u>**6** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1, 3, 4, 5, 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.